மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட புகார்கள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. வெளியிலே புகார் கள் இருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி இருந் தாலும் இல்லாவிட்டாலும், இந்தத் துறையை நல்ல முறையில் வலி வாக்கவும், விரிவாக்கவும் இந்த அரசு விரும்புகிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, இவர்கள் எல்லாம் என்ன என்ன காரியங்களுக்காக, குற்றம் சாட்டப்பட்டிருக்கின் றனர் ? என்ன என்ன குற்றங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்கள் மீது எடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும், நடவடிக்கைகளையும் வெளியிடுவதற்கில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்சம் சம்பந்தமான கேஸ்களை பிடிக்கும்போது பொறிவைத்துத்தான் பிடிக்கிறார் கள். இதனால் பல சமயங்களில் நிரபராதிகளைப் பிடித்து தண்டித்து விடு கிறார்கள். ஆகவே, உண்மையில் லஞ்சம் கொடுப்பவர்களைப் பிடித்துத் தண்டிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கேஸ்களை பொறி வைத்தும் பிடிக்கிறார்கள் : வழக்குகள் தொடரப்பட்டும் பிடிக் கிறார்கள்.

திரு. ஆலடி அருணா : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பை தீவிரப்படுத்த, அரசாங்கம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரிகள் தேர்ந் தெடுக்கும்போது, அந்த அதிகாரிகளின் சொத்துபற்றிய விவரங்களையும் பர்ஸனல் ஃபைலில் சேர்க்கும் உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. கே. போஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர் கள் பதில் சொல்லும்போது, 30 அதிகாரிகளின்மீது தொடரப்பட்ட வழக்கு களில் 4 வழக்குகள் வெற்றி பெற்றன என்று கூறினார்கள். நான்கு வழக்குகள் வெற்றி பெற்றன என்றால் மீதி வழக்குகள் தோல்வி யடைந்தனவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நான்கு வழக்குகள் வெற்றிபெற்றன என்றால், மீதி வழக்குகள் தோல்வியடைந் தனவா என்று உறுப்பினர் கேட்கிறார். புலனாய்விலே 16 வழக்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. விசாரணையில் 5 வழக்குகள் இருந்து வருகின்றன. கண்டுபிடிக்க முடியாதவை என்று கருதி கைவிடப்பட்ட வழக்குகள் 3, டிபார்ட்மெண்ட்டில் ஒன்றும், டிரிப்யூனலில் ஒன்றும் இருக்கின்றன.

Advertising Consultants for Government

*268 *Q.*—**Thiru N. S. V. CHITHAN :** Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have kept any private firm as their advertising consultants ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

Thiru T. MARTIN : May I request the Hon. Minister to state the basis which Government adopts in selecting newspapers for giving their advertisements ?

1969 மார்ச் 11]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்தப் பத்திரிகைகளின் விற்பனை, தரம் போன்றவைகளைப் பார்த்து விளம்பரம் அளிக்கப்படுகிறது.

தென்னையிலிருந்து பதநீர் இறக்கல்

*269 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்
திரு. என். எஸ். வி.சித்தன் } மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னையிலிருந்து பதநீர் இறக்குகின்ற அனுமதி எந்தெந்த மாவட்டங்களில் அமுலிலிருக்கின்றது ?

(இ) செங்கற்பட்டு, சேலம் ஆகிய மாவட்டங்களில் உடனடியாக அமலாக்கின்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தமிழ்நாடு முழுவதும் வெல்லம் தயாரிப்பதற்காக மட்டும் தென்னை மரத்திலிருந்து பதநீர் இறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னையிலிருந்து பதனீர் இறக்கப்பட்டு, வெல்லம் மட்டும் காய்ச்சப்படுகிறது. இப்படி பதனீராக விற்றால் தான் மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தென்னை மரத்திலிருந்து பதனீராக இறக்கப்பட மாட்டாது. அப்படிச் செய்தால் அது வேறு காரியங்களுக்குப் பதப்படுத்தப்பட்ட நீராக அமையும்.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரத்திலிருந்து இறக்குகிற பதனீரையும், தென்னை மரத்திலிருந்து இறக்குகிற பதனீரையும் இரண்டையும் குடித்துப் பார்த்தவர்கள் சொல்கிறார்கள், தென்னை மரத்திலிருந்து இறக்குகிற பதனீர் சுகமாகவும், ருசியாகவும், உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததாகவும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, மக்களுடைய நன்மையைக் கருதி, அப்படிக் குடிப்பவர்களுக்காக மட்டிலும் பதநீர் இறக்குவதற்கு அனுமதி கொடுக்கமுடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சொல்லக் கூறியதோ அல்லது சொந்த அனுபவமோ எனக்குத் தெரியாது. இப்போது அனுமதி வழங்குவதற்கில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, சர்க்கார் உத்தரவு இருந்தும், தென்னம் பதநீரை இறக்கி, சீர்காழி தாலுகா பகுதிகளில் ரோடிலேயே வைத்து விற்கிறார்களே, அப்படிப்பட்டவர்கள் மீது அங்குள்ள அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிறகாவது அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அரசு இதைக் கவனத்தில் கொள்ளும்.

Thiru T. MARTIN : May I request the Hon. Minister to state whether the sale of 'Neera' is prohibited under the Act ? If it is not prohibited, what is the obstacle which is preventing the Government from selling the same through Co-operative Jaggery Societies in the City or some other place ?